புதுக்கோட்டை மாவட்டம், வேங்கை வயல் விவகாரத்தில்

பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுத்தது தி.மு.க. அரசு!

சட்டமன்றத்தில் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, ஆக. 29- சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு பேசியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும் அப்படிப்பட்ட நிகழ்வு எங்குமே நடக்கக் கூடாது. இதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை.

2022 டிசம்பர் 24ஆம் தேதி வேங்கைவயல் சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவம் நடந்த இரண்டு நாட்கள் கழித்து, டிசம்பர் 26ஆம் தேதி புகார் தரப்பட்டது.

புகார் அளிக்கப்பட்ட அன்றைக்கே இந்த விஷயம் தொடர்பாக வெள்ளானூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டது.

இந்த வழக்கை சிபிஐ விசாரிக்க வேண்டும் என்று ஒரு சிலர் வழக்கு போட்டார்கள். அதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 29.3.2023 அன்றைக்கு ஓய்வுபெற்ற நீதியரசர் சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் கமிஷன் அமைத்தார்கள்.

இந்த வழக்கிலே அன்

றைக்கு சிபிசிஐடி நூற்றுக்கும் மேற்பட்ட சாட்சிகளிடம் விசாரணை நடத்தினார்கள். பல பேருடைய அலைபேசி எண்கள், தொலைத்தொடர்பு தகவல்கள் ஆய்வு செய்தார்கள். சிலரிடம் உயிரியல் மாதிரி எடுத்து, டிஎன் ஏபகுப்பாய்வு செய்யப்பட்டது.

அதன் அடிப்படையில், மூன்றுபேர் குற்றவாளிகள் என்று உறுதி செய்யப்பட்டு, ஜனவரி 2025 இல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது.

மிகவும் உணர்வுபூர்வமானஇந்த வழக்கை, எங்கள் தலைவர் தலைமையிலான அரசு மிகவும் கவனமாககையாண்டார்கள்.

ஆனால்சட்டத்துறை அமைச்சரான நம்முடைய சி.டி. நிர்மல்குமார் அவர்கள், அன்றைக்கு இந்த மாதிரிசம்பவம் நடக்கக் கூடாது என்றுதான்பதிவு போட்டார். பிறகு, அந்த பதிவையே நீக்கி விட்டார். அவ்வாறுபதிவை நீக்கினாலும், நல்ல வேளை அதனுடையது இருக்கிறது.

இன்றைக்கு சட்டத்துறை அமைச்சராக இருக்கின்ற சி.டி. நிர்மல்குமார், அன்றைக்கு என்ன செய்தார் தெரியுமா? இந்தச் சம்பவத்திலே கலவரத்தை ஏற்படுத்த வேண்டும் என்று, பாதிக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரையுமே குற்ற வாளிகள் என்று சொல்லி, சமூக வலைதளத்திலே பதிவு போட்டார். அதன் பிறகு, பல காரணத்தால், அவர் போட்ட பழைய பதிவையெல்லாம் தேடித் தேடி நீக்கிவிட்டார். ஆனாலும் அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கிரீன் ஷாட்ஆகஇருக்கிறது.

(குறுக்கீடு)

அவர் போட்ட ட்வீட்டுக்கான ஆதாரங்கள் ஸ்கிரீன் ஷாட்ஆகஇருக்கிறது. சரி, நாங்கள்தான் அங்கெல்லாம் போகவில்லை, வரவில்லை என்று சொல்கிறீர்கள்.

நான் மீண்டும் குற்றம் சொன்னதாக நீங்கள் நினைக்கக் கூடாது. சரி, இப்போது வேங்கைவயலுக்கு எங்கள் தலைவர் போகவில்லை என்று சொல்கிறீர்களே... நாங்கள் உறுதியாகச் செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்தோம். குற்றவாளிகள் முரளிராஜா, சுதர்சன், முத்துக் கிருஷ்ணன் ஆகியோருக்குத் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் போகவில்லை என்றுநீங்கள சொல்கிறீர்களே... இன்றைக்கு திண்டுக்கல் மாவட்டத்தில் வடமதுரை அடுத்த தங்கம்மாபட்டியில், அரசு உயர்நிலைப் பள்ளி குடிநீர் தொட்டியில் ஆகஸ்ட் 2ஆம் தேதி மனிதக் கழிவு கலந்திருக்கிறார்கள்.

அதற்கு இந்த முதலமைச்சர் போனாரா? முதலில் அப்படி ஒரு சம்பவம் நடந்தது என்று அவருக்குத் தெரியுமா? இந்த சம்பவத்திலே யார் மேலாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா? தமிழ்நாட்டில் இன்றைக்குஎத்தனையோ குற்றச் சம்பவங்கள் நடக்கிறதே, அதில் ஏதாவது ஒன்றிற்காவது முதலமைச்சர் போனாரா? அதற்கு ஏதாவது விளக்கம் சொல்வார்களா என்று கேட்கின்றேன்.

இவ்வாறு கே.என். நேரு பேசினார்.

கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசனின் தாயார் மறைந்த மணியம்மாள் (எ) மணிமேகலை அவர்களின் திருவுருவப்படத்திற்கு கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்செல்வன், கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, வால்பாறை சட்டமன்ற உறுப்பினர், வால்பாறை நகர கழகச் செயலாளர் குட்டி (எ) சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

த.வெ.க.வினருக்கு 'பார்ட்டி ஃபண்ட்' தர மறுத்ததால் போர்வெல் பணியில்

ரூ.65 ஆயிரம் கூடுதலாகக் கேட்ட த.வெ.க.வினருக்கு டெண்டர்!

தமிழ்நாடு அரசுக்கு ரூ. 6.5 லட்சம் இழப்பு!

மயிலாடுதுறை, ஆக. 29- தமிழ்நாட்டில் பொய்யான செய்திகளை பொதுமக்களிடம் பரப்பி சினிமா மோகத்தில் ஆட்சிக்கு வந்து திறமையற்ற ஊழல் ஆட்சி நடத்தி வரும் விஜய் தலைமையான தவெக அரசு தூய சக்தி என்று தங்களுக்கு தாங்களே தப்பாட்டம் அடித்துக் கொண்டு தமிழ்நாட்டில் பெரும் ஊழல் செய்து வரும் நிலையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒப்பந்த பணிக்கு தவெகவினரின் ரூ 4 லட்சம் மதிப்பிலான பணியை ரூ 3.30 லட்சத்தில் செய்து தர ஒப்பு கொண்டு டெண்டர் கோரியவர் டெண்டரை ரத்து செய்து ரூ 3.95 லட்சம் டெண்டர் கோரிய தவெக ஒன்றிய செயலாளருக்கு டெண்டர் வழங்கிய தற்கு ஒப்பந்தக்காரர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். 4 ஆண்டுகளாக ஒப்பந்தப் பணிகள் செய்ய விண்ணப்பித்து கிடைக்காத நிலையில் கடந்த இரண்டு மாதத்திற்கு முன் விண்ணப்பித்த த.வெ.க. வினருக்கு சால்வஸ் வழங்கிய தற்கும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் தலா ரூ.4 லட்சம் மதிப்பில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்குவதற்கான டெண்டரில், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவரிடம் 10 சதவீதம் பார்ட்டி ஃபண்ட் கேட்டதாகவும். அதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும் பரபரப்பு புகார் எழுந்துள்ளது.

மேலும், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், அதிக தொகைக்கு ஏலம் கேட்ட வருக்கு வேலை வழங்கப்பட்டதால் அரசுக்கு சுமார் ரூ.7 லட்சம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாக ஒப்பந்ததாரர் ஒருவர் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்துள்ளார்.

மயிலாடுதுறை பெருந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த அப்துல் அகத் என்பவர் ஒப்பந்தப் பணிகளை செய்து வருகிறார். மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் 10 இடங்களில் போர்வெல் அமைத்து மின் இணைப்பு வழங்கும் பணிக்காக ஒப்பந்ததாரர் மூலம் துணை ஒப்பந்தம் வழங்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இதற்காக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகையை அப்துல் அகத் தனது வங்கிக் கணக்கிலிருந்து செலுத்தியுள்ளார். தலா ரூ.4 லட்சம் மதிப்பிலான பணிக்கு ரூ.3.30 லட்சம் என குறைந்த தொகைக்கு டெண்டர் கோரியுள்ளார்.

டெண்டர் திறக்கப்பட்ட மறுநாளே, 10 சதவீதம் 'பார்ட்டி ஃபண்ட்' வழங்க வேண்டும் என தவெக மாவட்டச் செயலாளர் தரப்பில் கேட்கப்பட்டதாக அப்துல் அகத் தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர், நான் ஏற்கனவே 18 சதவீதம் தள்ளுபடி செய்து இந்த வேலையை எடுத்துள்ளேன். மேலும் 10 சதவீதம் வழங்க என்னால் முடியாது என தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து 3 நாட்களுக்குப் பிறகு அவரது ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டதாகவும், உடனடியாக ரூ.40 ஆயிரம் முன்வைப்புத் தொகை அவரது வங்கிக் கணக்கில் திரும்ப செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விசாரித்த போது, ரூ.4 லட்சம் மதிப்பிலான பணியை ஏற்கனவே ஒப்பந்தம் கோரிய வரைவிட ரூ.65000 கூடுதலாக ரூ.3.95 லட்சத்திற்கு டெண்டர் எடுத்த ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டிருப்பது தெரிய வந்ததாக அப்துல் அகத் கூறியுள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த அவர், குறைந்த தொகைக்கு டெண்டர் எடுத்தவருக்கு ஒப்பந்தம் வழங்காமல், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் அதிக தொகைக்கு ஏலம் கேட்டவருக்கு டெண்டர் வழங்கியதன் மூலம் அரசுக்கு பண இழப்பு ஏற்பட்டுள்ளதாகக் கூறி மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

மேலும், லஞ்சம் மற்றும் ஊழலற்ற ஆட்சி என கூறும் தவெக தரப்பினர், 10 சதவீத 'பார்ட்டி ஃபண்ட்' கேட்டு பணம் வசூலிப்பதுடன், அரசுக்கும் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தனது புகாரில் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து உடனடியாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கிடையே, சீர்காழியைச் சேர்ந்த திலீபன் என்பவர் கூறுகையில், தாங்கள் கடந்த 4 ஆண்டுகளாக ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப் பணிகளுக்காக விண்ணப்பித்து வருவதாகவும், இதுவரை வாய்ப்பு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதுபோல் சுமார் 10 பேர் ஒப்பந்தப் பணிக்காக காத்திருப்பதாகவும் அவர் கூறினார். கடந்த ஜூன் மாதம் ஒப்பந்ததாரருக்கு மனு அளித்த மயிலாடுதுறை கிழக்கு ஒன்றிய தவெக செயலாளர் சேத்தூர் முருகேசனுக்கு ஒப்பந்ததாரர் உரிமம் கிடைத்ததைத் தொடர்ந்து, தற்போது அதிக தொகைக்கு ஏலம் எடுத்து 3 டெண்டர்களைப் பெற்றுள்ளதாக அவர் குற்றம்சாட்டினார்.

10 ஆண்டுகளாக துணை ஒப்பந்ததாரராக பணியாற்றி அனுபவம் இருந்தும் எங்களுக்கு வாய்ப்பு கிடைக்க வில்லை. ஆனால் புதிதாக வந்த தவெக ஒன்றியச் செயலாளருக்கு சால்வன்சி சான்று மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைப்பது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என அவர் தெரிவித்தார்.

ஊழலற்ற ஆட்சி நடத்துவதாக கூறும் நிலையில், தவெக ஒன்றியச் செயலாளருக்கு சான்றிதழ்கள் மற்றும் ஒப்பந்தப் பணிகள் கிடைத்திருப்பது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும், தகுதியுள்ள தங்களுக்கு அரசு ஒப்பந்தமும் அதற்கான உரிமம் வழங்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பி.கே.சேகர்பாபு – ஜோசப் சாமுவேல் முன்னிலை! அம்பத்தூர் இரா. நாதன் துணைவியார்

ரங்கநாயகி (எ) கோவிந்தம்மாள் திருவுருவப் படத்திறப்பு!

டி.ஆர்.பாலு எம்.பி. – ஆர்.எஸ்.பாரதி – அன்பகம் கலை – டி.கே.எஸ்.இளங்கோவன் – முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, ஆக.29- அம்பத்தூர் நகர முன்னாள் செயலாளரும் முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.இரா. நாதன் மனைவியும் சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி ஆ. இரா.அருண் தயாருமான ரங்கநாயகி என்கிற கோவிந்தம்மாள் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா 02.09.2026 புதன்கிழமை அன்று நடைபெற உள்ளது.

மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் தொகுதி செயலாளர் பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் ஜோசப் சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினரும் ஏழாவது மண்டல குழு தலைவர் பி.கே. மூர்த்தி, அம்பத்தூர் தெற்கு பகுதி செயலாளர் டி.எஸ். பி.ராஜகோபால், அம்பத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் எம்.டி.ஆர். நாகராஜ்,

80 வது வட்ட செயலாளர் வெ.ராதாகிருஷ்ணன் மாவட்ட பிரதிநிதி பொன் நவராஜ் ரவி, எம்.எ.ஜீவா ஆகியோரின் முன்னிலையில் நடைபெறுகிறது.

கழகப் பொருளாளரும், நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் மறைந்த அம்மையாரின் திருவுருவப் படத்தை திறந்து வைக்க உள்ளார்.

விழாவிற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக அமைப்பு துணைச் செயலாளர் அன்பகம் கலை, கழக செய்தி தொடர்பு செயலாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர், கழக ஆதிதிராவிட நல உரிமை அணி செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியாராஜன் ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகர செயலாளர் சன்.பிரகாஷ் மற்றும் மாநில நிர்வாகிகள் ப.ரங்கநாதன், இ.பரந்தாமன், பா.தாயகம் கவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், திருமதி சங்கரி நாராயணன், மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, பூவை ஜெரால்டு, கன்னிகை ஜி ஸ்டாலின், மதுரை இளம கிழன், பரிதிஇளம்சுருதி,

பகுதி செயலாளர்கள், ஐசி எஃப் வ.முரளிதரன் கூ.பி.ஜெயின், மாவட்ட நிர்வாகிகள் வி.ரமேஷ் நீல கண்டன், டாக்டர் ஏபி பூர்ணிமா, எல்.பி.எப்.மோகன், டாக்டர் ஜி.சந்தகுமாரி, து.ஆயிரம், துரை வீரமணி, புழல் எம்.நாராயணன், பூவை அப்பர் ஸ்டாலின், மாமன்ற உறுப்பினர்கள் பொற்கொடி கண்ணபிரான், உஷா நாகராஜ், உமா சந்தானம், கே சாரதா, அம்பத்தூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் திராவிட செல்வம், க.முரளி பாபு, எம். கதிஜா மா.ரமேஷ்,

வட்ட செயலாளர்கள் வே.ரவீந்திரன், பு.வீரா என்கிற வீரராகவன் மூ.ரகு த. கண்ணபிரான் எம்கமல் மு.சண்முகம் எ.சுந்தரராஜ் மு.விஜயகுமார் எஸ். மோகன்குமார் த.வ.லால், சி.சீனிவாசன் த.பிரகாஷ்குமார் எம்.இ.சேகர் நா.நெப்போலியன், இரா. டீக்கா அம்பத்தூர் பகுதி மாவட்ட பிரதிநிதிகள் மு.குணசேகரன் ப.மதி மா.குப்புசாமி க.ஜீவா எஸ். பி.அரிகிருஷ்ணன் எம்.அரிகிருஷ்ணன் கோ.சேகர்லால் பி.வி.மூர்த்தி இரவைபிரபு, த.தமிழ்ச்செல்வி ம.சீனிவாசன் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளும் கலந்து கொள்கிறார்கள்.

இறுதியாக முன்னாள் வட்ட செயலாளர் த.தணிகைநாதன், பொன்.மகேந்திரகுமார் அ.மணிமொழி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்டம், கூலூர் கலங்கல் சாலையில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எஸ் திருமண மண்டபம் அருகில் கூலூர் பேரூர் கழக செயலாளர் கௌதமன் புதிதாக துவங்கியுள்ள நூல் நிலம் புத்தக கடையை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன், கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்தலை ந.கவுதமன், எழுத்தாளர் மனித உரிமை செயற்பாட்டாளர் வழக்கறிஞர் ச.பாலமுருகன் திறந்து வைத்தனர். இதில் கூலூர் தெற்கு ஒன்றிய செயலாளர் மன்னவன், தலைமை செயற்குழு உறுப்பினர் பீடம்பள்ளி சுரேஷ்குமார், திராவிட இயக்க தமிழர் பேரவை மாநில அமைப்பு செயலாளர் நாகராஜ், நகர கழக செயலாளர் நித்யா மனோகரன் (கருமத்தம்பட்டி), பேரூர் கழக செயலாளர் விஸ்வநாதன் (கண்ணம்பாளையம்), பேரூராட்சி தலைவர்கள் தேவி மன்னவன் (கூலூர்), புஷ்பலதா ராஜகோபால் (கண்ணம்பாளையம்), மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் கூலூர் பிரபு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் விஜயகுமார் உள்பட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

குடந்தை, கரூரில் இருந்து நேபாளம் சென்ற 40 பேரின் குடும்பத்தினர் கண்ணீர்!

பத்திரமாக மீட்டுக் கொண்டு வரக் கோரிக்கை!

தஞ்சை, ஆக.29- தஞ்சை மாவட்டம் கும்பகோணம் அடுத்த நாகேஸ்வரன் தெற்கு வீதியில் செயல்படும் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் நேபாளத்துக்கு 57 பேர் ஆன்மீக சுற்றுலா சென்றனர். முன்தினம் நேபாளம் நாட்டின் ரசுவா மாவட்டத்தில் போதேகோஷி ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கில் 3 பஸ்களில் சென்ற 57 பேர் சிக்கினர். இதில் ஒரு பஸ்சின் டிரைவர் சாமர்த்தியத்தால் 20 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

இதைதொடர்ந்து 2 பஸ்களுடன் மாயமான மயிலாடுதுறை ஓய்வுபெற்ற நீதிபதி சிவஞானம்(63), மூர்த்தி(65), பத்மினி(61), கடலூர் மாவட்டம் புவனகிரி திரிபுரசுந்தரி(67), பள்ளிப்படை முருகானந்தம்(69), தர்மபுரி புஷ்பா(54), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த பிரேமாவாணி(45), புஷ்பராணி(59), நெல்லூர் திம்மராயசாமி(46), மம்தா(39), மயிலாடுதுறை மாவட்டம் கழுக்காணிமுட்டம் புஷ்பலதா(60), நல்லூர் ராஜேஷ்வரி(57), கூறைநாடு வெங்கட்ராமன்(50), நாமக்கல் வசந்தபுரம் கிருஷ்ணவேணி(65), புதுச்சேரி மாநிலம் காமராஜ் நகர் ஆனந்தசுந்தரி(58), பெட்டியார்பாளையம் வைஷ்ணவி(50), கீதா(68), தஞ்சை மாவட்டம் களிமேடு அன்பழகி(67), ராஜப்பன் நகர் சித்ரா(61), வ.உ.சி நகர் சிவயோகம்(65), பூக்காரலாயம் இளவரசி(70), கிருஷ்ணாபுரம் தங்கமதி(49), கும்பகோணம் சத்யம் நகர் ராம்குமார்(60), இவரது மனைவி கீதா(56), சுவாமிமலை வடக்குவீதி ராஜ்குமார்(62), இவரது மனைவி ஜெயந்தி(54), செட்டிமண்டபம் ரமேஷ்(68), புதுமணி வடக்கு தெரு திருமலை ராஜன்(54), இவரது மனைவி தையல்நாயகி(54), கர்ணகொல்லை அக்ரஹாரம் சாய்நாத்(70), இவரது மனைவி ஜெயலட்சுமி(64), இவர்களது மகள் கேதாரகவுரி(32), காளிமுத்து நகர் சையது உமர் பாரூக்(29), திருவண்ணாமலை கண்ணம்மாள்(67), திருவாரூர் மாவட்டம் திருக்கண்ணமங்கை கலைச்செல்வி(66), மன்னார்குடி வடுவூர் பாலசுப்பிரமணியன்(58) ஆகிய 36 பேரை தேடும் பணி தொடர்ந்து நடந்து வருகிறது.

இதுவரை மீட்கப்பட்ட கடலூர் மாவட்டம் சிதம்பரத்தை சேர்ந்த தியாகராஜன்(49), கிருபாகரி(49), பழனியப்பன்(69), கலைமதி(67), முத்துக்குமரேசன்(56), மைதிலி(49), நெய்வேலி டவுன்ஷிப் திருமாவளவன்(62), சென்னை மணப்பாக்கம் சத்யா (58), வேளச்சேரி நாவு கபீர்தாஸ்(55), வேளச்சேரி விஜய புவனேஸ்வரி(55), பெசன்ட் நகர் சாந்தி(47), மாறன்(57), கர்நாடக மாநிலம் பெங்களூருவை சேர்ந்த கனகசபை(68), ராதை(64), கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரை சேர்ந்த ரகுநாதன்(56), மயிலாடுதுறையை சேர்ந்த மணிமேகலை(65), ரத்னகுமார்(65), பூங்குழலி(62), திருச்சியை சேர்ந்த வள்ளிநாயகி(62), சிவரஞ்சனி(46), கற்பகம்(62) ஆகிய 21 பேரை பாதுகாப்புடன் ஹெலிகாப்டர் மூலம் காத்மாண்டுவுக்கு அழைத்து வரவுள்ளனர். பின்னர் அங்கிருந்து விமானம் மூலம் தமிழகத்துக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

இதுகுறித்து கும்பகோணம் சூப்பர் யாத்ரா ஏஜென்சி உரிமையாளர் சையது சாதிக் கூறுகையில், "மாயமான 36 பேரின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் எங்களது அலுவலகத்துக்கு வந்து விசாரித்து செல்கின்றனர். சிலர் போனில் தொடர்பு கொள்கின்றனர்" என்றார். ஆன்மிக பயணம் மேற்கொண்ட சுவாமிமலையை சேர்ந்த ராஜ்குமார், ஜெயந்தி தம்பதியரின் மகன்கள் மணிகண்டன், கோவிந்த ராஜ் ஆகியோர் கூறியதாவது: எங்கள் பெற்றோர் ராஜ்குமார், ஜெயந்தி ஆகியோர் சூப்பர் யாத்ரா ஏஜென்சி மூலம் கடந்த 23ம் தேதி கும்பகோணத்தில் இருந்து ஆதி கைலாசுக்கு சென்றனர். 23, 24, 25ம் தேதிகளில் எங்களிடம் பேசினார்கள். 26ம் தேதி காலையில் அவர்கள் சென்ற இடத்தில் வெள்ளப்பெருக்கு என கேள்விப்பட்டோம். அதை பார்த்ததில் இருந்து எங்களது குடும்பமே மன உளைச்சலில் உள்ளது. இதுவரை 21 பேரை மீட்டுள்ளனர். அவர்களை போன்று எங்களது பெற்றோர் மற்றும் மாயமானவர்களை மீட்டு கொண்டு வர அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கரூரில் இருந்து ஆன்மீக சுற்றுலாவுக்கு ஒரே குழுவாக நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டை சேர்ந்த அன்பரசு, கரூர் கேவிபி நகர் பெரியார் நகரை சேர்ந்த தனலட்சுமி(60), கரூர் காமராஜபுரம் வடக்கு தெருவை சேர்ந்த கற்பகம்(55), கரூர் அருணாசலம் 3வது தெருவை சேர்ந்த தமிழரசி அசோகன் ஆகிய 4 பேரும் மாயமாகியுள்ளனர். இவர்களின் செல்போன் எண்ணை உறவினர்களால் தொடர்பு கொள்ள முடியவில்லை. இதுகுறித்து கற்பகத்தின் கணவர் பெரியசாமி கூறுகையில், எனது மனைவி கற்பகம் கடந்த 14ம் தேதி கயிலாய யாத்திரைக்கு புறப்பட்டு சென்றார். நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசிய போது நாங்கள் தற்போது சீன நாட்டின் எல்லையில் இமிகி ரேஷன் பணிகளுக்காக காத்திருக்கிறோம் என்றனர். அதன் பின்னர் அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

அவரை தேடுவதற்காக எங்களது குடும்பத்தினர் சிலரை அனுப்பி வைத்துள்ளேன் என்றார்.

நேபாளத்துக்கு சென்ற கரூர் வடக்கு காந்தி கிராமம் ஹவுசிங் போர்டு பகுதியை சேர்ந்த அன்பரசு புலியூர் காளிபாளையம் பகுதியில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இதுகுறித்து அவரது மகள் கூறுகையில், நான் எனது தந்தையிடம் தினமும் காலையில் எங்கு இருக்கிறார் என்று லொகேஷன் பகிருமாறு கூறுவேன். அதன்படி நேற்று முன்தினம் காலை அவரை தொடர்பு கொண்டு பேசியபோது சீன நாட்டின் எல்லை பகுதியில் காத்திருப்பதாக கூறினார். அதன்பிறகு எனது தந்தையை தொடர்பு கொள்ள முடியவில்லை. இதனால் எங்களது குடும்பத்தினர் பதற்றத்துடன் இருந்து வருகிறோம் என்றார்.